மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

கனரக ரப்பர் தொழிற்சாலை

***40497—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பெருஞ்சாணியில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் மாநில அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வந்தால், டிட்கோவுடன் இணைந்து புதிய இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பத்மநாபபுரம் தொகுதியில் சுமார் 15 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் உலகத்தரம் வாய்ந்த இரப்பர் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அரசு இரப்பர் கழகத்தின்மூலமாகவும், தனியார் இரப்பர் தோட்டங்களின் வாயிலாகவும் தினந்தோறும் சுமார் 100 டன் கச்சா இரப்பர் உற்பத்தியாகின்றது. குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் கச்சா இரப்பர், வெளி மாநிலங்களில் இருக்கின்ற இரப்பர் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இரப்பர் தொழிற்சாலை அமைக்கத் தேவையான நிலம் பெருஞ்சாணியில்*

2014 ஜனவரி 31]

அரசு இரப்பர் கழகத்தின் கைவசம் இருக்கின்றது. தனியார் நிறுவனம் இரப்பர் தொழிற்சாலை நடத்த முன்வந்தால், அரசு கடனுதவி வழங்கும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து ஓர் ஆண்டாகியும், தனியார் நிறுவனம் யாரும் இன்னும் அதற்கு முன்வரவில்லை. ஆகவே, அரசே முன்வந்து பெருஞ்சாணியில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைத்தால், படித்த இளைஞர்கள், தொழிலாளர்கள் பல ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பத்மநாபபுரம் தொகுதி, பெருஞ்சாணியில் அரசின் சார்பாக கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 சதவிகிதம்தான் இரப்பர் உற்பத்தியாகின்றது. பக்கத்தில் இருக்கின்ற கேரள மாநிலத்தில் 90 சதவிகிதம் உற்பத்தியாகின்ற காரணத்தினால், இரப்பர் உற்பத்தி செய்கின்ற சிறிய தொழில் முனைவோர்கள் எல்லாம் கூட்டாக சேர்ந்து இரப்பர் உற்பத்தி செய்து, அதை கேரளாவிற்குக் கொண்டு சென்று விடுகின்றனர். கேரளாவில் இருந்து கன்னியாகுமரிக்கு இரப்பர் கொண்டு வருவதற்கு அங்கே இரப்பர் வாரியம் இருக்கின்ற காரணத்தினால், தடை செய்யப்பட்டிருக்கிறது, அதனால் இங்கு கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 36 ஆயிரம் டன் அளவுதான் வருடத்திற்கு இரப்பர் உற்பத்தியாகின்றது. இது 5 சதவிகிதம் மட்டும்தான். இந்திய அளவில் பார்க்கும்போது, 6 இலட்சத்து 40 ஆயிரம் டன் இரப்பர் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. அதில் 90 சதவிகிதம் கேரளாவில் உற்பத்தியாகின்றது. பக்கத்தில் உள்ள கேரளாவில் தொழிற்சாலை இருக்கின்ற காரணத்தினால், இங்கே தொழில் துவங்க யாரும் முன்வரவில்லை. கடந்த முறை மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழகத்தில் புதிய தொழிற்சாலை துவங்க வேண்டுமென்பதற்காக, கன்னியாகுமரியில் 250 ஏக்கர் கடல்சார் வாரியம் மற்றும் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்குண்டான ஏற்பாட்டை செய்தார்கள். அதற்காக 115 ஏக்கர் நிலத்தை

செண்பகராமன்புதூரில் பார்த்து வைத்திருக்கிறோம், இன்னும் 100 ஏக்கர் நிலம் வந்ததற்குப் பின்னால், அங்கு தொழிற்சாலை துவங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு இரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஓர் ஒப்பந்தம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி, 2006 ஜனவரி மாதம் மத்திய அரசும் ஒப்புதல் வழங்கியது. அதற்குப் பின்னால் வந்த கடந்த கால அரசு தேவையான இடத்தைக் கொடுக்காத காரணத்தினால், 2008 இல் உங்களுடைய அரசும், டிட்கோவும் சேர்ந்து இங்கே இரப்பர் தொழிற்சாலை கொண்டு வரமுடியாது என்று அதை கேன்சல் செய்துவிட்டார்கள். ஆக, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொழிற்சாலை அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரல்வாய்மொழி-நெடுநல்வாடு நெடுஞ்சாலை அருகில் செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா அமைக்க 250 ஏக்கர் நிலம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கைவசப்படுத்தப்பட்டது. அந்த நிலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கையகப்படுத்தப்பட்ட காரணத்தினால், அங்கு இரப்பர் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அ.தி.மு.க. அரசால் கைவிடப்பட்டது. செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா அமைக்காவிட்டாலும், மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு பெருஞ்சாணியிலாவது இரப்பர் பூங்கா அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை இரத்து செய்துவிட்டது என்று சொல்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தவேண்டும். இன்னொன்று, 2008 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சியிலேதான் அது இரத்து செய்யப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதோ மாண்புமிகு அம்மா ஆட்சியில் நடந்ததைப்போல உண்மைக்குப் புறம்பாகச் சொல்கின்றார்கள். நீங்கள் அதற்கு ஆதாரம் கொடுத்தால் நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தாலும் நான் விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செண்பகராமன்புதூரில் 115 ஏக்கர் நிலத்தை இப்போது கண்டறிந்து இருக்கின்றது. இன்னும் 150 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியதற்குப் பின்னால், புதிய தொழிற்சாலை, கடல்சார் வாரியம், பொறியியல் துறை மற்றும் இரப்பர் தொழிற்சாலை ஆகிய மூன்றையும் சேர்த்துக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். 2008 ஆம் ஆண்டு டிட்கோவுடன்* Joint Venture *இருந்ததை உங்களுடைய அரசுதான்* cancel *செய்தது என்பதை மீண்டும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

போக்குவரத்துப் பணிமனை

***7204—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கள்ளிக்குப்பம் பகுதியில் மாநகர போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?